செ.வெ. எண்: 795 நாள்: 28.1‘2.2011

## செய்தி

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் சென்னை, திருவான்மியூரில் உள்ள இம்காப்ஸ் நிறுவனத்தின் பணிகளை பார்வையிட்டார்**

*********

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் சென்னை, திருவான்மியூரில் உள்ள இந்திய மருத்துவ உற்பத்தி மற்றும் செய்தொழில் கூட்டுறவு நிறுவனத்தின் பணிகளை பார்வையிட்டார்.

இந்திய மருத்துவ முறைகளாகிய சித்தா, யுனானி மற்றும் ஆயுர்வேதா முறையில் தயாரிக்கப்படும் தைலம், மாத்திரை, லேகியம் போன்றவைகளை ஆய்வுக்கூடங்களில் பார்வையிட்டபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மருந்துகள் அனைத்தும் சுத்தமானதாகவும் தரமான முறையில் தயாரிப்பதை கண்டறிந்து அங்கிருந்த மருத்துவ அலுவலர்களிடம் மேற்படி மருந்துகள் அனைத்தும் சரியான விகிதாச்சார அடிப்படையில் தட்பவெட்ப நிலைக்கு ஏற்ப தயாரிக்கப்படுகிறதா என்றும், அனைத்துவகை நோய்களுக்கும் மருந்துகள் தயாரிக்கப்படுகிறதா என்றும் கேட்டதற்கு, இம்ப்காப்ஸ் நிறுவனத்தின் மருத்துவ அலுவலர்கள், அனைத்துவகை நோய்களுக்கும் தரமான மருந்துகள் தயாரித்து விற்பனை செய்யப்படுகிறது என்றும், குறிப்பாக ஆண்மையின்மை, குழந்தையின்மை, வயிற்று வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, மூலம், மூட்டுவலி போன்ற நோய்களுக்கு சிறந்த முறையில் மருந்துகள் தயாரித்து இந்தியா முழுவதும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு விற்பனை செய்யப்பட்டு மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது என்று தெரிவித்தனர்.

மேலும், இம்ப்காப்ஸ் நிறுவனம் ஆசியாவிலேயே சித்தா, யுனானி மற்றும் ஆயுர்வேதா ஆகிய இந்திய மருந்துகளை தயாரிக்கும் பெரிய நிறுவனம் என்று தெரிவித்ததோடு இவ்வாய்வுக் கூடத்தில் இயங்கும் பர்னஸ் ஆயில் பாய்லர் ஒரு மாத பயன்பாட்டிற்கு ரூ. 5 இலட்சம் வீதம் செலவாகிறது என்றும் இச்செலவினத்தை குறைக்க எரிபொருள் பாய்லர் பொருத்தப்பட்டுள்ளது. இந்த பாய்லரை பயன்படுத்தினால் மாதம் ஒன்றிற்கு ரூ.60,000 மட்டுமே செலவாகும். இதனால் மாதம் ஒன்றிற்கு சுமார் ரூ.4 இலட்சம் வரை செலவு குறைக்கப்படும் எனவும் தெரிவித்தனர்.

மேலும், இந்நிறுவனத்தில் 12,000 இந்திய மருத்துவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர் என்றும் இவர்களுக்கு 25% தள்ளுபடியில் மருந்துகள் வழங்கப்படுகிறது என்று தெரிவித்தனர்.

அப்போது, இம்ப்காஸ் நிறுவனத்தின் தலைவர் டாக்டர் ஏ. ராமலிங்கம், செயலாளர் (பொறுப்பு) டாக்டர் டி.ஜி.இராதாகிருஷ்ணன் மற்றும் இயக்குநர் டாக்டர் பி.சூரியபிரகாஷ் (ஐதராபாத்) ஆகியோர் உடனிருந்தனர்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் சென்னை, திருவான்மியூரில் உள்ள இந்திய மருத்துவ உற்பத்தி மற்றும் செய்தொழில் கூட்டுறவு நிறுவனத்தின் பணிகளை பார்வையிட்டார். அப்போது, இம்ப்காஸ் நிறுவனத்தின் தலைவர் டாக்டர் ஏ. ராமலிங்கம், செயலாளர் (பொறுப்பு) டாக்டர் டி.ஜி.இராதாகிருஷ்ணன் மற்றும் இயக்குநர் டாக்டர் பி.சூரியபிரகாஷ் (ஐதராபாத்) ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**